ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2447/71 - 2025 අගෝස්තු මස 02 වැනි සෙනසුරාදා - 2025.08.02

2447/71 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DS/MG/LND/02/1/10.
காணி அமைச்சின் கோவை இல.: 4-3/5/2012/HW/ 321.

பொது மக்கள் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

பதுளை - கரமெடிய ஆந்தாஉல்பத வீதியை புனரமைப்பதற்கான (கி.மீ. 23 + 460 - கி.மீ. 23 + 480) காணி எடுத்தல்.

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் மீகஹகிவுல பிரதேச செயலாளர் பிரிவில் இல. 22, மீகஹகிவுல கிராம அலுவலர் பிரிவில் மீகஹகிவுல கிராம நில அளவையாளர் நாயகத்தின் இல. 613 மற்றும் 2020.10.29 ஆந் திகதியிலான இறுதி கிராம வரைபட மேலதிக இல. 12, தாள் இல. 12 கொண்ட பிஹில்லேகெதரவத்த காணியில் 0.0039 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**01. துண்டு இல. 364**

காணியின் பெயர்: பிஹில்லேகெதரவத்த; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு, பழைய காணித்துண்டுகளின் குறிப்பு: இ.கி.வ. 613 துண்டு (பாகங்கள்) இல. 321; விஸ்தீரணம்: 0.0003 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 365**

காணியின் பெயர்: பிஹில்லேகெதரவத்த; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: மீகஹகிவுல, பிஹில்லேகெதரவத்தயில் வசிக்கும் வெலகொன வத்தே வலவ்வே சேனாநாயக்க செனவிரத்ன ஹேரத் முதியன்சேலாகே சந்திராவதீ குமாரிஹாமி, பழைய காணித்துண்டின் குறிப்பு: இ.கி.வ. 613 துண்டு (பாகங்கள்) இல. 325; விஸ்தீரணம்: 0.0034 ஹெக்டயார்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**03. துண்டு இல. 366**

காணியின் பெயர்: - ; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு, பழைய காணித்துண்டுகளின் குறிப்பு: இ.கி.வ. 613 துண்டு (பாகங்கள்) இல. 321; விஸ்தீரணம்: 0.0002 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீகஹகிவுல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். எம். என். குமுதுனி,
பிரதேச செயலாளர்,
மீகஹகிவுல.

பிரதேச செயலகம்,
மீகஹகிவுல,
2025, யூலை 28.

EOG 08 - 0024

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DS/MG/LND/04/12/08.
காணி அமைச்சின் கோவை இல.: எல்டி/05/2005/எச்/393.

பொது மக்கள் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ரோபேரி கிராமிய வைத்தியசாலை அபிவிருத்தி செய்வதற்காக காணி எடுத்தல்

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் மீகஹகிவுல பிரதேச செயலாளர் பிரிவில் ஒய பலாத கோரளையின் சிறு பிரிவில், ரோபேரி தோட்டம் கிராமத்தின் நில அளவையாளர் நாயகத்தின் 2008.09.15 ஆந் திகதியிலான ஆரம்ப வரைபட இல. ப/606, கொடியகஸ்தென்ன எனப்படும் கொகடியகஸ் தென்ன காணியில் 1.5077 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**01. துண்டு இல. 01 - ஆ.வ.ப. 606**

காணியின் பெயர்: கொடியகஸ்தென்ன எனப்படும் கொகடியகஸ்தென்ன; விபரம்: தோட்டப் பயிர்ச் செய்கை, வரு. 18-30 அளவு வயதை உடைய பலா மரம் மூன்றும், வரு. 16-20 அளவு வயதை உடைய டர்பன்டயின் மரம் முப்பதும், வரு. 16 அளவு வயதை உடைய தேக்கு மரம் ஒன்றும், நிரந்தரக் கட்டிடம் ஆறும், தண்ணீர் தாங்கி ஐந்தும் உள்ளன; உரிமை கோருபவர்: அரசு, காணி எடுத்தற் சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் அரசிற்கு எடுக்கப்பட்டுள்ளது; ஆரம்ப உரிமை கோருபவர்: வரை/மடொல்சீம பெருந் தோட்ட நிறுவனம், ரோபேரி கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திக்காக தேவைப்படுகின்றது. கட்டடம் மற்றும் தண்ணீர் தாங்கி அமைந்த நிறுவனங்களை கண்டறிய முடியவில்லை, காணி எடுத்தல் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்காக; விஸ்தீரணம்: 1.4050 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 02 - ஆ.வ.ப. 606**

காணியின் பெயர்: - ; விபரம்: பாதை; உரிமை கோருபவர்: அரசு, காணி எடுத்தற் சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் அரசிற்கு எடுக்கப்பட்டுள்ளது; ஆரம்ப உரிமை கோருபவர்: வரை/மடொல்சீம பெருந் தோட்ட நிறுவனம், ரோபேரி கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திக்காக தேவைப்படுகின்றது. காணி எடுத்தல் நடவடிக்கைகளை முடிவுறுத் துவதற்காக; விஸ்தீரணம்: 0.0773 ஹெக்டயார்.

**03. துண்டு இல. 03 - ஆ.வ.ப. 606**

காணியின் பெயர்: - ; விபரம்: பாதை; உரிமை கோருபவர்: அரசு, காணி எடுத்தற் சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் அரசிற்கு எடுக்கப்பட்டுள்ளது; ஆரம்ப உரிமை கோருபவர்: வரை/மடொல்சீம பெருந் தோட்ட நிறுவனம், ரோபேரி கிராமிய வைத்திய

சாலை அபிவிருத்திக்காக தேவைப்படுகின்றது. காணி எடுத்தல் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்காக; விஸ்தீரணம்: 0.0254 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீகஹகிவுல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். எம். என். குமுதுனி,
பிரதேச செயலாளர்,
மீகஹகிவுல.

பிரதேச செயலகம்,
மீகஹகிவுல,
2025, யூலை 28.

EOG 08 - 0025

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DS/MG/LND/03/02/07.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/5/2014/HW/244.

2020.08.19 ஆந் திகதிய 2189/27 ஆம் இலக்க இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரச அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 7 ஆவது பிரிவு அறிவித்தலில் வெளியிடப்பட்டு நடாத்தப்பட்ட 2020.10.12 ஆந் திகதியிலான உரிமை கோரல் விசாரணை இரத்துச்செய்து நில அளவை ஆணையாளரின் 2024.10.14 ஆந் திகதியிலான மற்றும் இலக்கம் B/MGH/2024/44 உடைய திருத்தப்பட்ட காணி விபரப்பட்டியலின் பிரகாரம் 2025.09.24 ஆந் திகதி மீண்டும் உரிமை கோரல் விசாரணை நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தம்பகஹபிடிய - பின்னகொல்ல - அராவ - மீகஹகிவுல வீதியின் இல. 12/3 பாலத்தை மீள நிர்மாணிப்பதற்காக காணி எடுத்தல்.

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் மீகஹகிவுல பிரதேச செயலாளர் பிரிவில் கரந்தகஹமட கிராமத்தின் இறுதி கிராம வரைபட இல. 605, மேலதிக 2 தாள் இல. 2 இல் பிடகொடுவேயாய என்ற காணியில் மொத்த விஸ்தீரணம் 0.1917 ஹெக்டயார் கொண்ட கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 68**

காணியின் பெயர்: பிடகொடுவேயாய; விபரம்: 30 - 35 வயதையுடைய கலப்புப் பயிர்ச்செய்கை உண்டு; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: அலுத் நுவர சமன் தேவாலயம் (தற்போது ரத்நாயக்க முதியன்சேலாகே கஞ்சனா குமாரி அவர்களினால் பயன்படுத்தப்படுகின்றது); விஸ்தீரணம்: 0.0850 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 70**

காணியின் பெயர்: பிடகொடுவேயாய; விபரம்: 30 - 35 வயதையுடைய கலப்புப் பயிர்ச்செய்கை உண்டு; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: அலுத் நுவர சமன் தேவாலயம் (தற்போது ரத்நாயக்க முதியன்சேலாகே கஞ்சனா குமாரி அவர்களினல் பயன்படுத்தப்படுகின்றது); விஸ்தீரணம்: 0.0805 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 72**

காணியின் பெயர்: பிடகொடுவேயாய; விபரம்: தற்காலிக கலப்புப் பயிர்ச்செய்கை உண்டு; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: அலுத் நுவர சமன் தேவாலயம் (தற்போது ரத்நாயக்க முதியன்சேலாகே கஞ்சனா குமாரி அவர்களினல் பயன்படுத்தப்படுகின்றது); விஸ்தீரணம்: 0.0262 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி மு.ப.

10.00 மணிக்கு மீகஹகிவுல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். எம். என். குமுதுனி,
பிரதேச செயலாளர்,
மீகஹகிவுல.

பிரதேச செயலகம்,
மீகஹகிவுல,
2025, யூலை 28.

EOG 08 - 0026